இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் NCEL மற்றும் COOPFED கைச்சாத்து

அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், இந்தியாவின் தேசிய கூட்டுறவு ஏற்றுமதி நிறுவனம் (NCEL) மற்றும் இலங்கையின் 'நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம்' (COOPFED) ஆகியவை கொழும்பில் இன்று ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையில் (MoU) கைச்சாத்திட்டன.

2. இலங்கையின் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ வசந்த சமரசிங்க மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா ஆகியோரின் முன்னிலையில், NCEL முகாமைத்துவ பணிப்பாளர் திரு. அனுபம் கௌசிக் மற்றும் COOPFED தலைவர் டாக்டர் சாந்த ஜெயரத்ன ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

3. இவ்விரு நிறுவனங்களினதும் கூட்டுறவு வலையமைப்பு மற்றும் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தும் ஒரு கட்டமைப்பை இந்த ஒப்பந்தம் வழங்குகிறது. இந்த பங்குடைமையின் கீழ், NCEL- கூட்டுறவு வலையமைப்பு ஊடாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படும். இது பொருட்களின் பற்றாக்குறையைக் குறைக்கவும், மலிவு விலையில் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யவும் ஆதரவளிக்கும். .

4. விவசாய மற்றும் உணவுப் பொருள் விநியோகம் மட்டுமல்லாமல், சந்தை நிலவர தகவல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பரிமாறல், திறன் விருத்தி, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, களஞ்சிய மற்றும் ஏற்பாட்டியல் வசதிகள், விநியோகச் சங்கிலி முகாமைத்துவம் மற்றும் டிஜிட்டல் தளங்கள் ஆகியவற்றிலும் ஒத்துழைப்பை வலுவாக்குவதனை இந்த உடன்படிக்கை வலியுறுத்துகின்றது. மேலும், இரு நாடுகளினதும் கூட்டுறவுத் துறைகளுக்கு இடையிலான நிறுவன ரீதியான தொடர்புகளையும் வலுப்படுத்தும்.

5. கூட்டுறவுத் துறை மூலமாக ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக இந்திய அரசின் கூட்டுறவு அமைச்சின் கீழ் குறித்த NCEL ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் உயர் மட்ட அமைப்பான COOPFED உடனான இதன் பங்குடைமையானது, இந்திய விநியோகஸ்தர்களுக்கும் இலங்கை நுகர்வோருக்கும் இடையிலான தொடர்புகளையும் மேலும் வலுப்படுத்தும்.

6. மேலும், உணவுப் பாதுகாப்பு, மீள்திறனுடனான விநியோகச் சங்கிலிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோருக்கான நன்மைகள் ஆகியவற்றில்

அக்கறை செலுத்தி, இந்தியா-இலங்கை இடையிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதில் இந்த உடன்படிக்கை ஒரு முக்கிய மைல்கல்லாக அமைகிறது.

*****

கொழும்பு
06 ஒக்டோபர் 2026